
# உலகின் கடைசி இரவு !

கர்த்தர் உங்களை அதிகமாய் ஆசீர்வதிப்பாராக !

பாம்பீய் என்ற ஒரு நகரத்தை குறித்து நாம் சரித்திர புத்தகத்திலே வாசித்திருப்போம்.













அந்த நகரம் ரோமாபுரிக்கு வடக்கு பக்கமாக இருக்கிறது. ரோமர்கள் வல்லரசாக மாறிகொண்டு வருகிற அந்த காலத்திலே, பாம்பீய் என்றவன் ஒரு பெரிய தளபதியாக அங்கு இருந்தான். அவன்தான் முதன்முதலாக ரோமராஜ்யத்தை ஆப்பிரிக்கா ஐரோப்பா நாடுகளிலும் ஸ்தாபித்தான்.அவன் ஞாபகமாக பாம்பீய் என்ற ஒரு பெரிய நகரத்தை செழிப்பான ஒரு இடத்தில் கட்டினார்கள். வெஸீவியஸ் என்ற ஒரு எரிமலை அங்கு இருந்தது.



அந்த நகரத்தில் பெரும் பாவங்கள் நிரம்பியிருந்தது. ஏராளமான அடிமைகள் அங்கிருந்தார்கள். அங்கு விபசாரம் வேசித்தனம் விக்கிரக ஆராதனைகள் ஏராளமாக இருந்தது. அந்த பட்டணத்திலே இருந்தவர்கள் இரவிலே உண்டு களித்து நடனமாடி பகலிலே உறங்குவார்கள். அந்த பட்டணத்தின் பாவங்கள் மிகவும் பலுகி பெருகியிருந்தது. கிறிஸ்துவுக்கு பின் 70 வது ஆண்டு ஒரு நாள் இரவிலே, எல்லோரும் உண்டு களித்து நடனமாடிய பிறகு உறங்கிகொண்டிருந்த வேளையிலே, திடிரென ஆகாயத்திலே ஒரு பெரிய வெளிச்சம் உண்டாயிற்று. ஒரு சில ஜனங்கள் விழித்து இருந்தார்கள் மற்றவர்கள் ஆழ்ந்து உறங்கி கொண்டிருந்தார்கள். அந்த வெளிச்சம் தொடர்ந்து பெரிதாகிகொண்டேபோனது. பயங்கர இறைச்சல் உண்டாயிற்று. உறங்கிகொண்டிருந்தவர்கள் எழுந்து பார்த்தபொழுது அந்த எரிமலை வெடிக்க ஆரம்பித்துவிட்டது. எல்லோரும் ஓட ஆரம்பித்தார்கள்,23 மைல் தூரத்திற்கு கற்கள் வீசி அடித்தது. எங்கு பார்த்தாலும் மழைபோல கற்கள் கொட்டினது. 23 மைல் தூரத்திற்கு அக்கினி குழம்பினாலே அந்த பட்டணம் அமிழ்ந்து போனது.













அதே போல கடைசிக்காலத்திலேயும் நாம் அறியாத நேரத்திலே பலவிதமான அழிவுகள் நமக்கு வரும் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

**அந்நாளில் வெளிச்சம் இல்லாமல், ஒருவேளை பிரகாசமும் ஒருவேளை மப்புமாயிருக்கும்.ஒருநாள் உண்டு, அது கர்த்தருக்குத் தெரிந்தது; அது**

**பகலுமல்ல இரவுமல்ல; ஆனாலும் சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும். -சகரியா 14. 6, 7**

கிறிஸ்து இரண்டாவது முறை இந்த பூமிக்கு வரும்போது தனது பாதங்களை பூமியிலே வைக்க மாட்டார். ஆகாயத்திலிருந்து தனது தேவதூதர்களை அனுப்புவார், மீட்கப்பட்டவர்கள் எழுந்து ஆண்டவரோடு பரலோகத்திற்கு போவார்கள். அவர் மூன்றாவது முறை வரும்போது அந்த ஒலிவமலைமீது வந்து இறங்குவார் என்று வேதம் சொல்லுகிறது. ஆகவே அவர் வரும் நாளை யாரும் அறியார். பிதா ஒருவர் தவிர வேறு யாரும் அறியார். நடு இரவிலே அவருடைய வருகை இருக்கும். உறங்கிகொண்டிருக்கிற உலகத்தில் திடிரென்று சூரியன் பிரகாசிக்கும்.

**லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள்,குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். லோத்து**



**சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப்போட்டது. மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும். -லூக்கா 17. 28, 29, 30.**

இந்த உலத்தின் கடைசி இரவை பற்றி ஆண்டவர் பேசும்போது, லோத்து என்ற தேவ மனுஷனை பற்றி இங்கு கூறுகிறார். **சோதோம் கொமோரா** என்ற இரண்டு பட்டணங்கள் இருந்தன. அந்த பட்டணங்கள் இப்பொழுது இல்லை.அந்த இரண்டு பட்டணங்கள இருந்த இடத்திலே இப்பொழுது சவக்கடல் இருக்கிறது.









அந்த சவக்கடல் ஏறகுறைய 30 மைல் நீளம் 16 மைல் அகலமுள்ள கடல். அந்த பட்டணங்களை குறித்து சரித்திர புத்தகத்திலே என்ன எழுதியிருக்கிறது என்றால், அதுசீரும்சிறப்புமானதாகவும்,கொழுத்தபணமுள்ளதாகவும், பெரிய ஞானிகள் இருக்கும் இடமாகவும், வியாபாரம் அதிகமாக செழித்தோங்கிய நகரமாகவும் இருந்தது.அந்த நகரத்திலே பஞ்சமேயில்லாமலிருந்தது, ஆனால் அந்த இரண்டு நகரத்தாரும் பெரும் பாவிகளாக இருந்தார்கள்.அங்கு தெய்வபயமே இல்லாமலிருந்தது.

**இதோ, கெர்வமும், ஆகாரத் திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே உன் சகோதரியான சோதோமின் அக்கிரமம்; இவைகளே அவளிடத்திலும் அவள் குமாரத்திகளிடத்திலும் இருந்தன; சிறுமையும் எளிமையுமானவனுடைய கையை அவள் பலப்படுத்தவில்லை. -எசேக்கியேல் 16. 49** அந்த பட்டணத்திலே செல்வம் அதிகமாக இருந்ததினால் **கெர்வமும்** அதன் கூட அதிகமாக வந்தது.இப்படி



பெருமை அகம்பாவம் உள்ள இடத்திலே கடவுள் பயம் எப்படி இருக்கும்? **ஆகாரத்திற்கு** பஞ்சமே இல்லாமலிருந்தது அப்படியிருக்க ஆண்டவரை எப்படி தேடுவார்கள்? அவர்கள் இன்றோ நாளையோ அல்லது அடுத்த மாதத்தை குறித்தோ எந்தவொரு கவலையும் இல்லாமலிருந்தார்கள். எல்லாமே

அவர்களுக்கு இருந்தபடியால் **நிர்விசாரமானிகளாக** இருந்தார்கள்.எதை குறித்தும் கவலைப்படுவதில்லை. அவர்கள் செய்த மிக பெரிய பாவம், இந்த சரீரமான தேவனுடைய ஆலயத்தை மிகவும் அசுசிப்படுத்தினார்கள். ஆணோடு ஆண் உறவு வைத்து,பெண்ணோடு பெண் உறவு வைத்து,மிகவும் கேவலப்படுத்தினார்கள். இந்த பொல்லாத செய்கைகள் கர்த்தருக்கு மிகவும் அருவருப்பானது. எப்படி அன்று இந்த கேவலமான காரியங்கள் நடந்ததோ அதேபோல இன்றும் மிக பயங்கரமாக மனிதர்கள் ஆணோடு ஆண் கல்யாணமே செய்துகொள்கிறார்கள். நாம் ஆண்டவரோடுகூட சேர்ந்து ஒரு விதத்திலே சிருஷ்டிக்கர்த்தாவாக இருக்கிறோம். நம்மால் குழந்தையை உருவாக்கமுடிகிறது பெற்றெடுக்கமுடிகிறது. அதனாலே நாம் சிருஷ்டிக்கர்த்தாவாக இயேசு கிறிஸ்துவுக்கு சகோதரர்கள் என்று அழைக்கப்படுகிறோம். அது புனிதமான ஒரு காரியம், அதை அவலட்சனமாகவும் அசுத்தமாகவும் கேவலமாகவும் உபயோகப்படுத்தினால், ஆண்டவரால் எப்படி பொருத்து கொள்ளமுடியும்? அங்கே ஆண்டவர் கண்காணிக்கிற தேவதூதர்களை அனுப்பினார். லோத்து என்ற ஆபிரகாமின் அண்ணண் மகன் அங்கு இருந்தான். அவனோ கடவுளுக்கு பயந்தவனாக இருந்தான். அங்கு நடக்கிற அக்கிரமங்களை குறித்து அவன் மிகவும் வருத்தப்பட்டான்.

**பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி; சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து;அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு;நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க; -2 பேதுரு. 5, 6, 7**

இங்கு நீதிமானாகிய லோத்து என்று ஆண்டவர் சொல்லுகிறார். பாவத்தை அருவெறுத்து அந்த பாவத்தை செய்கிற மக்களுக்காக அழுத நீதிமானாகிய லோத்தின் வீட்டுக்கு அந்த இரண்டு தேவதூதர்கள் வந்தார்கள். லோத்தை தங்களோடே அழைத்துக்கொண்டு வெளியே வந்து விட்டார்கள். அன்று இரவு கடந்து விடியற்காலையிலே அந்த பட்டணம் அழிக்கப்பட்டது. எல்லோரும் உறங்கி கொண்டிருந்த அந்த வேலையிலே அக்கினியும் கந்தகமும் வானத்திலிருந்து வந்து விழுந்து அது அழிக்கப்பட்டது. அந்த பட்டணம் சாம்பலாக போய்விட்டது.அந்த பட்டணம் இருந்த இடம் இப்பொழுது சவக்கடலாக போனது. ஆகவே ஆண்டவர் மீண்டும் எச்சரிக்கிறார், அந்த பட்டணம் அழிந்தது போல, இந்த உலகமே நாளை அழியபோகிறது.பொழுது விடியும் முன்னே சேவல் கூக்குரலிடுகிறது. அதாவது சத்தியம் உலகெங்கும் கூக்குரலிடுகிறது, அதை கேட்டு எழுந்திருக்கிறவன் பாக்கியவான், அவன்



அழிவுக்கு தப்பித்து கொள்கிறான். இன்னும் கொஞ்சம் கைமுடக்கிகொண்டு தூங்குகிறவனுக்கு அழிவு சடுதியாக அவன் மீது வருகிறது. இன்றைக்கு பட்டணங்களிலே ஏராளமான அநியாயங்களும் அக்கிரமங்களும் பெருகிக்கொண்டே போகிறது. ஆண்டவர் இந்த உலகத்தை அழிக்கும்போது, முதலாவதாக பட்டணங்களை அழிக்கபோகிறார். பட்டணங்களை விட்டு வெளிபோங்கள் என்று வேதம் நமக்கு எச்சரிக்கிறது. கர்த்தரை நேசிக்கிறவர்களுக்கு ஒருநேரம் வரும் , அது மிக வேகமாக வந்து கொண்டிருக்கிறது.பட்டணத்தில் வாசம் பண்ணமுடியாத அந்த நேரத்தை ஆண்டவர் நமக்கு காட்டும்போது, நாம் பட்டணங்களை விட்டு ஓடிவிட வேண்டும் என்று கர்த்தர் நம்மை எச்சரிக்கிறார். உலகத்தில் இப்பொழுது நடக்கிற காரியங்களை குறித்து கவனித்து பார்க்கவேண்டும் எத்தனை லட்ச மக்களில் எத்தனை பேர் இரட்சிக்கப் படாமலேயே அழிந்துபோயிருப்பார்கள். சாத்தான் அவன் தந்திரத்தால் எல்லோரையும் அழிக்கிறான்.நாம் அவனை வெல்ல கர்த்தரண்டை விரைந்து போய்விடவேண்டும், தாமதிப்போமானால் அவன் தனக்கு கொஞ்சகாலம் மாத்திரம் இருக்கிறது என்று நம்மையும் அவன் கூட அழைத்து போய்விடுவான்.

**நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்.நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது.**
**-லூக்கா 17. 26, 27**

இங்கு நோவா காலத்திலே கர்த்தர் மக்களுக்கு ஒரு எச்சரிப்பை கொடுத்தார். பல வருஷகாலமாய் நோவா மக்களை எச்சரித்து வந்தான்,அவர்களோ கேளாமல் போனார்கள். கடைசியில் கர்த்தர் உலகம் முழவதையும் தண்ணீரால் அழித்தார். நோவா குடும்பம் மட்டும் தப்பித்தது. இன்று மக்கள் வருகிற அழிவை குறித்து கொஞ்சமும் கவலைப்படாமல் ஆண்டவர் கிருபையின் காலத்தை அடைக்கும் வரைக்கும் புசித்து குடிக்கிறார்கள், பெண்கொண்டு கொடுக்கிறார்கள், ஆனால் நாம் நினையாத நேரத்திலே அவர் வந்து இந்த பாழாய் கிடக்கிற பூமியை அழித்துபோடுவார்.

**மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள். -மத்தேயு 25. 13**

கடைசியாக இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து நமக்கு எச்சரிப்பை கொடுக்கிறார்.

**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்;. ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்.**
**-மத்தேயு 24. 4, 5**

இனி வரும் நாட்களில் இப்படி நடக்கும்.அநேகர் தானே கிறிஸ்து என்று சொல்லிகொண்டு வருவார்கள். இந்த கடைசி காலத்திலே நம்மை வஞ்சிப்பதற்கு

சாத்தான் நிறைய தந்திரங்களை உபயோகப்படுத்துவான். சத்தியத்தை பொய்யாக்குவான்.



**யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையியிருங்கள்; இவைகளெல்லிம் சம்பவிக்கவேண்டியதே; ஆனிலும் முடிவு உடனே வராது.**
**-மத்தேயு 24.6**

இந்த தீர்க்கதரிசனம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது.









**ஜனத்துக்கு விரோதமிய் ஜனமும், ரிஜ்யத்துக்கு விரோதமிய் ரிஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். -மத்தேயு 24.7**


இந்த தீர்க்கதரிசனம் இப்பொழுது மிக துள்ளியமாக நடந்து வருகிறது.











**அப்படியே இவைகளையெல்லாம் நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.**
**-மத்தேயு 25.33**

ஆகவே நமக்காக ஆண்டவர் சிலுவையில் அறையப்பட்டது ஒவ்வொரு மனிதனுக்கும் அது வீணாகபோகாமல் அவருடைய இரத்தத்தினாலே நாம் சீக்கீரமாய் கழுவப்பட்டு குணமடைய வேண்டும். அவர் இந்த உலத்திற்கு வந்தது நம்மை பரலோகத்திற்கு அழைத்து செல்லதான். அதற்காகவே அவர் வந்து நமக்கு செய்யவேண்டிய காரியங்களை குறித்து தெளிவாய் சொல்லி பல தீர்க்கதரிசனங்களை நமக்கு கொடுத்து எச்சரித்திருக்கிறார். அதற்காகவே நாம் போராடி நித்திய ஜீவனடைய பெரும் முயற்சி செய்வோம். காலம் சமீபித்து விட்டது, இனி என்ன இருக்கிறது இந்த உலகத்திலே? ஆண்டவர், கடைகிக்காலத்திலே அறிவு பெருகிபோம் என்று சொல்லியிருக்கிறார். அறிவு மிக அதிகமாகவே இன்று பெருகிவிட்டது. இன்னும் என்ன இருக்கிறது? நிறைவேறவேண்டிய பல தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிவிட்டது இன்னும் சில தீர்க்கதரிசனம் முடிந்ததென்றால் எல்லாமே முடிந்தது. பிறகு அழுது பிரயோஜனம் என்ன? அவர் வருகையை குறித்து ஜாக்கிரதையாக நாம் நடந்துகொள்ளவேண்டும். கர்த்தர் இதை படிக்கிற ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக !

~ஆமென்.